## மாதிரி வினாத்தாள் விடைக் குறிப்பு - 2019-20

## MARKING SCHEME FOR SAMPLE QUESTION PAPER -2019-20

பன்னிரண்டாம் வகுப்பு — மொத்த மதிப்பெண்கள் :80

[ XII –STD ] — Maximum marks: 80

தமிழ் — கால அளவு;3 மணி

TAMIL — Time Allowed: 3 hours

---

### பகுதி –அ (40 மதிப்பெண்கள் )

### (Section:A ) (40 marks)

1.(அ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. 4 x 1= 4

I. ஆறுவது சினம் என்று ஆறு முறை எழுதினான்.
II. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
III. அறிவு பணிவையும் அறியாமை ஆணவத்தையும் தரும்.
IV. தூரத்துப் பச்சைக் கண்ணுக்குக் குளுமை.
V. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
VI. பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது பழமொழி.

ஆ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக . 4 x 1= 4

I. வெள்ளிப் பனி மலை மீதுலாவுவோம்;மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்
II. கண்ணுக்குக் கருணை அழகு; கவிதைக்குக் கற்பனை அழகு.
III. தண்ணீர்ப் பாம்பைப் பார்த்து நல்ல பாம்பு என்று நினைத்துவிட்டேன்.
IV. பாடாத் தேனீக்கள் பசியா வயிறு உலவாத் தென்றல் கண்டதுண்டோ?
V. மலர்த் தோட்டத்தின் அருகே தயிர்க் குடம் எடுத்துச் சென்றாள் மலர்விழி.
VI. எட்டுக் கால் பூச்சியைப் பார்த்து பத்துத் தலை இராவணன் பயப்படமாட்டான்.

இ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக.. 4 x 1= 4

I. அன்னைத் தமிழை அழகுறக் கற்பிக்க வேண்டும்.
II. கம்பரை அறியாதவர்எவரும் இலர்
III. கோதை "நான் திருப்பாவை பாடுகிறேன்" என்று கூறினாள்
IV. வரம் தசரதனிடம் இருந்து கைகேயியால் பெறப்பட்டது.
V. வளவன் வண்டி மாடுகளை ஓட்டினான்.
VI. பாண்டியர் சங்கம் கண்டு தமிழை வளர்த்தனர்

2. (அ). பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி. [5]

I. எலிகளுக்கு. ஒரு ஜோடி வெட்டும் பற்கள் உள்ளன. வருடத்திற்கு சென்டிமீட்டர் வீதம் வாழ்நாள் முழுதும் அவற்றின் பற்கள் வளர்த்துக்கொண்டே இருக்கும். 1

II. எலிகள் சுண்டெலியைவிடப் பெரியவை. எலிகளின் கால்களில் ஐந்து விரல்கள் உண்டு. உடலில் முடி நிறைந்திருக்கும், மீசை உண்டு, கடினமான வால் உள்ளது. சுமாரான பார்வைத்திறன் உண்டு 1

III. . சில இனங்கள் தரையிலும், சில பூமிக்கடியில் வளைகளிலும் மற்றும் சில மரங்களிலும் வாழ்கின்றன. 1

IV. வெள்ளை எலி அநேக மக்களால் உண்ணப்படுகிறது. எலியை உணவுக்காக வியாபாரரீதியாக வளர்கின்றனர். கானா, பிலிப்பைன்ஸ், வியத்நாம், தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் எலியை உண்கின்றனர். 1

V. பற்களின் மேல் உள்ள பற்பூச்சு வலிமையானது. அதனால்தான் உலோகம் போன்ற கடினப் பொருள்களையும் எலியால் எளிதாகக் கடிக்க முடிகிறது 1

**(ஆ ) தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சீர்செய்ய அரசு எடுத்துள்ள முயற்சி குறித்து குடிநீர் வடிகால் ஆணையரை நேர்காணல் செய்க.** [5]

**[ அல்லது ]**

**பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.**

i. போரிடும் உலகத்தை வேரொடு சாய்க்க வேண்டும் 1
ii. பொதுவுடைமைக் கொள்கையை உயிரென்று காக்க வேண்டும் 1
iii. இதயத்தை அன்பு நதியினில் நனைத்திட வேண்டும். 1
iv. இதுஎனது என்னுமோர் கொடுமையைத் தவிர்க்க வேண்டும். 1
v. ஒருபொருள் தனதெனும் மனிதரை நோக்கி நகைக்க வேண்டும் 1

**3 . <u>கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக.</u>** **[10]**

தலைப்பு ½ மதிப்பெண்

முன்னுரை 1 மதிப்பெண்

உள்ளடக்கம் 7½ மதிப்பெண்

முடிவுரை 1 மதிப்பெண்

4.விண்ணப்பக் கடிதம் [ 8 ]

4 <u>சரியான விடைக்கு முழுமதிப்பெண் வழங்குக</u>

அனுப்புநர் 1 மதிப்பெண்

பெறுநர் 1 மதிப்பெண்

விளி ½ மதிப்பெண்

பொருள் ½ மதிப்பெண்

கருத்து 3½ மதிப்பெண்

இடம்,தேதி ½ மதிப்பெண்

முகவரி 1 மதிப்பெண்

<u>உறவுமுறைக் கடிதம்</u>

இடம்,தேதி ½ மதிப்பெண்

விளி ½ மதிப்பெண்

நலம் வினவல் 1 மதிப்பெண்

கருத்து 4 மதிப்பெண்

முடிப்பு 1 மதிப்பெண்

முகவரி 1 மதிப்பெண்

## பகுதி – ஆ (40 மதிப்பெண்கள்)

(section:B) (40 marks)

5. <u>கீழ்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.</u>

[ 3×5=15 ]

சரியான விடைகள் சரியான அளவில் பிழையின்றி அமைந்தால் உரிய மதிப்பெண் வழங்குக.

6. <u>கீழ்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி.</u>

[ 2×5= 10 ]

சரியான விடைகள் சரியான அளவில் பிழையின்றி அமைந்தால் உரிய

மதிப்பெண் வழங்குக.

7 . <u>கீழ்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.</u> [5]

| | | |
|---|---|---|
| i. | இவ்வரிகள் இடம் பெற்ற நூல் நெடுநல்வாடை | 1 |
| ii. | ஆசிரியர் நக்கீரர் | 1 |
| iii. | இச்செய்யுள் வாகைத்திணையைச் சார்ந்தது | 1 |
| iv. | இச்செய்யுள் கூதிர்ப்பாசறைத் துறையைச் சார்ந்தது | 1 |
| v. | கூதிர்காலம் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும் | 1 |

(அல்லது)

<u>வினாக்கள்:</u>

| | | |
|---|---|---|
| i. | . இவ்வரிகள் இடம் பெற்ற நூல் கம்பராமாயணம், கம்பர். | 1 |
| ii. | இவ்வரிகள் இடம் பெற்ற காண்டம் அயோத்தியா காண்டம் | 1 |
| iii. | இவ்வரிகள் இராமன் கூற்று | 1 |
| iv. | குகனொடு சேர்ந்து | 1 |
| v. | குன்று சூழ்வான் மகன் சுக்கிரீவன் | 1 |

8. <u>ஏதேனும் ஒன்று பற்றித் துணைப்பாடக் கட்டுரை எழுதுக:</u> 10

கட்டுரை அமைப்பில் உட்தலைப்புகளோடு பிழையின்றி அமையின்

உரிய மதிப்பெண் வழங்குக.

------------------------------------